# J/PUTHUMADAM R.C.T.M SCHOOL

Manipay

யா/புதுமடம் றோ.க.த.க. பாடசாலை

மானிப்பாய்

# அதிபர் அறிக்கை

# PRINCIPAL'S REPORT

03-12-2014

# பாடசாலைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| மாகாணம் | - | வடக்கு |
| மாவட்டம் | - | யாழ்ப்பாணம் |
| வலயம் | - | வலிகாமம் |
| கோட்டம் | - | உடுவில் |
| கிராமசேவையாளர் பிரிவு | - | J/182 |
| பாடசாலை குறியீட்டு இலக்கம் | - | 1010021 |
| பரீட்சை இல | - | 11292 |
| தொகை மதிப்பீட்டு இலக்கம் | - | 09205 |
| பாடசாலை வகை | - | Type III |
| மொழிமூலம் | - | தமிழ் |
| தர வகுதி | - | தரம் 1 - 5 |
| பால் | - | கலவன் பாடசாலை |
| சம்பளக் கணக்கு இலக்கம் | - | 0009481258<br>இலங்கை வங்கி, சுன்னாகம் |
| F.F கணக்கு இலக்கம் | - | 109200180014958<br>மக்கள் வங்கி, சுன்னாகம் |
| SDA கணக்கு இல | - | 109-1-00180065171 |

# யா/ புதுமடம் றோ. க. த. க. பாடசாலை

# ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் - 2014

**காலம் : 03-12-2014 (புதன்கிழமை)**

**நேரம் : பிற்பகல் 1.00 மணி**

**இடம் : பாடசாலை மண்டபம்**

தலைவர் :

**திருமதி கு. சண்முகநாதன்**

*(அதிபர்)*

ஆசியுரை :

**வணபிதா X. W. ஜேம்ஸ் அடிகளார்**

*(பங்குத்தந்தை, மானிப்பாய் )*

பிரதம விருந்தினர் :

**கௌரவ சிவஞானம் சிறிதரன்**

*(யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)*

சிறப்பு விருந்தினர்கள் :

**உயர்திரு. சு. சண்முககுலகுமாரன்**

*(கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை)*

**தேசமானி லயன் செ. செல்வராஜா - J.P**

கௌரவ விருந்தினர்கள் :

**திருமதி சு. சூரியராஜா**

*(அதிபர், யா/சோதிவேம்படி வித்தியாசாலை)*

**லயன் சி. நாகையா - J.P**

*(ஓய்வுபெற்ற அதிபர்)*

# யா/ புதுமடம் றோ. க. த. க. பாடசாலை

**மகுட வாசகம்**

"கசடறக் கற்க"

**தூரநோக்கு :**

"சிறந்த சமூகத்தை உருவாக்குவோம்"

**நோக்கக்கூற்று :**

"தரமான கல்வியின் ஊடாக சிறந்த சமூகத்தை உருவாக்குவோம்"

# ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும்

- ❑ விருந்தினரை அழைத்து வரல்
- ❑ தேசியக் கொடியேற்றல்
- ❑ பாடசாலைக் கொடியேற்றல்
- ❑ மங்கள விளக்கேற்றல்
- ❑ கிறிஸ்தவ கீதம்
- ❑ தேவாரம்
- ❑ வரவேற்புரை
- ❑ வவேற்பு நடனம்
- ❑ ஆசியுரை
- ❑ அதிபர் அறிக்கை
- ❑ பரிசில் வழங்கல்
- ❑ கௌரவ விருந்தினர் உரை
- ❑ சிறப்பு விருந்தினர் உரை
- ❑ பிரதம விருந்தினர் உரை
- ❑ நன்றியுரை - செல்வி. ச. ஜயாத்துரை (ஆசிரியர்)
- ❑ கலை நிகழ்வுகள்
- ❑ கொடி இறக்குதல்
- ❑ பாடசாலைக் கீதம்

# அதிபர் அறிக்கை

மானிப்பாய் பதியில் சிறப்புடன் துலங்கும் புதுமடம் றோ.க.த.க பாடசாலையின் ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவுமாக அமைந்த தினமாகிய இன்றைய நன்நாளில் மாணவர் பரிசில்களைப் பெறுவதற்கு அனுக்கிரகம் வழங்கிய எல்லாம் வல்ல யேசு பிரானையும், சித்திவிநாயகரையும் மனதில் நிறுத்தி இவ் அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஒளிவிழாவிற்கும் பரிசளிப்பு விழாவிற்கும் ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் வணக்கத்திற்குரிய வணபிதா X. W. ஜேம்ஸ் அடிகளார் அவர்களே, சித்திவிநாயக சிவஸ்ரீ. பேரம்பல நிரூஷனக் குருக்கள் அவர்களே,

இன்றைய விழாவிற்கு எமது அழைப்பை ஏற்று பிரதம விருந் தினராக வருகை தந்துள்ள எமது யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி. சிறிதரன் அவர்களே,

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. சண்முககுலகுமாரன் அவர்களே, தேசமானி லயன். செ. செல்வராஜா அவர்களே, அவரோடு ஓய்வு பெற்ற அதிபர் லயன். சி. நாகையா J.P அவர்களே,

முன்னாள் பாடசாலையின் அதிபர் திருமதி சு. சூரியராஜா அவர்களே, ஆசிரிய ஆலோசகர் செல்வி வே. சிவலோஜினி அவர்களே,

எமது அயற்பாடசாலையின் அதிபர்களே, ஆசிரியர்களே!, ஆசிரிய ஆலோசகர்களே! எமது பாடசாலையின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்போடு பாடுபட்டுக் கொண் டிருக்கும் அன்பான ஆசிரியர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, எதிர்காலத்தை மிளிரச் செய்யும் மாணவச் செல்வங்களே, அன்பான மதிப்பார்ந்த பெற்றோர்களே உங்கள் அனைவருக்கும் உளம்கனிந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு அனைவரையும் வருக வருகவென அகமகிழ்வுடன் வரவேற்று உவகையடைகின்றேன்.

ஒரு பாடசாலையில் முக்கிய செயற்பாடுகளில் பரிசளிப்பு விழாவும் ஒன்றாகும். பரிசளிப்பு விழாவை சிறியளவில் மிகக் குறைந்த வளங்களுடன் எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனாக விழா சிறப்பாக அமையப்பட்டுள்ளது.

இவ்விழாவிற்கு நீங்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் வருகை தந்திருப்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. அத்துடன் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தொடர்ச் சியாக முழுமனதுடன் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கும் ஊக்கத் துக்கும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் உந்துசக்தியாக அமைகிறது.

ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் வணக்கத்திற்குரிய வணபிதா X. W. ஜேம்ஸ் அடிகளார் அவர்கள் எமது பாடசாலையின் தேவாலயத்தின் குருத்துவப் பணியையும் சமூகப் பணியையும் சிறப்பாக ஆற்றி வருகிறார். அவர் பணி சிறப்பாக அமைய வேண்டி அவர்களையும் அன்புடன் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

பிரதம குருக்கள் சிவஸ்ரீ. பேரம்பல நிரூஷனக் குருக்கள் அவர்களையும் அன்புடன் வரவேற்றுக்கொள்கின்றேன்.

எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்து மேடையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் கௌரவ சிவஞானம் சிறிதரன் - யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் பல்வேறு பட்ட நெருக்கடி மிகுந்த வேலைச்சுமைகளின் மத்தியிலும் எமது வேண்டுகோளை ஏற்று முழுமனதுடன் வருகை தந்தமையோடு அவர் கலைமானி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி பட்டங் களை தன்னகத்தே கொண்டதுடன் பன்னிரண்டு வருடங்கள் ஆசிரியராகவும், எட்டு வருடங்கள் அதிபராக மூன்று பாடசாலையில் சேவையாற்றி இறுதியாக கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபராக பணிபுரிந்து தற்போது யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கு அரும்பணியாற்றி வருகின்றார். இவரது பணி சிறக்க வாழ்த்தி பாடசாலை சமூகம் சார்பில் வருக வருகவென இருகரம் நீட்டி வரவேற்று மகிழ்வடைகிறோம்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு. ச. சண்முககுலகுமாரன் அவர்கள் முதுகல்விமாணி, கலைப்பட்டதாரி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பயிற்றப்பட்ட விஞ்ஞானம், அதிபர் சேவை தரம் I போன்ற பட்டங்களை தன்னகத்தே கொண்டுள்ளார். இவர் இயல்பாகவே அன்புடன் கூடிய கண்டிப்பும் அர்ப்பணிப்பும் கொண்டு தனது அலுவலகப் பணியைத் திறம்பட ஆற்றி வருகிறார். அவரை எமது பாடசாலைய சார்பில் வருக வருகவென வரவேற்றுக்கொள்கின்றேன்.

சிறப்பு விருந்தினர் வரிசையினுள் வருகை தந்து சிறப்பித்துக் கொண்டு இருக்கும் தேசமானி லயன் செ. செல்வராஜா J.P அவர்கள் இன் முகத்துடன் பழகி நகைச்சுவையாகப் பேசுவதோடு சமூகப் பணியையும் திறம்பட ஆற்றி வருகின்றார். இவர் எமது பாட சாலையை நன்கு அறிந்தவர். அவரையும் எமது சார்பில் வருக வருகவென வரவேற்று மகிழ்ச்சியடைகிறோம்.

கௌரவ விருந்தினர் வரிசையில் ஓய்வுபெற்ற அதிபர் லயன். சி.நாகையா - J.P அவர்கள் சமூக சேவையாளர். யார் என்ன உதவி கேட்டாலும் உதவும் மனப்பாங்கு கொண்டவர். அவரையும் அன்புடன் வருகவருகவென வரவேற்று அகமகிழ்வு அடைகிறோம்.

கௌரவ விருந்தினராகச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் முன்னைநாள் அதிபர் திருமதி சு. சூரியராஜா அவர்கள் இப்பாட சாலையில் அதிபராக கடமையாற்றி வந்த காலத்தில் இப்பாடசாலை மிகவும் பெரியதொரு வளர்ச்சி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. அதாவது பாடசாலையின் மாணவர்களின் எண்ணிக்கையை கூட்டியமை, ஆசிரியர் எண்ணிக்கையை கூட்டியமை, பெயர் பலகை வளைவு, அதிபர் அலுவலகம், மாணவர்களுக்கான கற்றல் உப கரணங்களைப் பெற்று மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியமை, பாடசாலை விழாக்களை நடாத்தியமை போன்ற பணி களை ஆற்றியமை குறிப் பிடத்தக்கது. அவர்களை சமூகம் சார்பில் வருக வருகவென வரவேற் கின்றோம்.

எமது வலயக் கல்வி அலுவலகம் வலிகாமம் ஆசிரிய ஆலோசகர் செல்வி. வே. சிவலோஜினி அவர்களை இன்முகத்துடன் வரவேற்றுக்கொள்வதோடு,

மற்றும் அயற்பாடசாலையின் மதிப்பார்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் வருக வருகவென வரவேற்று பழைய மாணவர்களே, அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே, நலன்விரும்பிகளே, பெற்றோர்களே, ஏனையோர் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக் கொள்கிறேன்.

**எமது பாடசாலை**

இப்பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 5 வரையும் 49 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். செல்வி ச. ஐயாத்துரை, திரு. செ. யூட்ரவிநாத், திருமதி கே. விசிந்தன், திருமதி க. ரமேஸ்குமார், திருமதி வ. நவாஸ்சங்கர், அ. சுரேஸ்குமார் ஆகியோர் நிரந்தர ஆசிரியர்களாகவும், செல்வி ஞா. பற்றீசியா பகுதிநேர ஆங்கில உதவி ஆசிரியராகவும், செல்வி த. தர்சினி தொண்டாராசிரியராகவும் கடமையாற்றி வருகின் றனர்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு எமது ஆசிரியர்கள் கற்பித்து வருகிறார்கள். எமது மாணவர்கள் வறுமை யான குடும்பப் பின்னணியைக் கொண்ட இவர்கள் ஏனைய பாட சாலை மாணவர்களைப் போலல்லாது பாடசாலையின் கற்றலில் மட்டுமே தங்கியிருக்கின்றார்கள்.

வலிகாம கல்வி வலயத்திலுள்ள 50 மாணவர்களுக்கு குறைவான பாடசாலை வகைகளினுள் எமது பாடசாலையும் ஒன்றாகும். 50 மாணவர்களுக்கு குறைவான மாணவர்களைக் கொண்டு இருந்தாலும் சளைக்காமல் குடும்ப மட்ட, கோட்ட மட்ட, வலய மட்டப் போட்டிகளில் வெற்றியிட்டி சாதனை படைத்து வருகின்றனர்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மட்டுமல்லாது புலமைப் பரிசில் பரீட்சையிலும் கடந்த வருடம் 100%மான மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேலும், இவ்வருடம் தோற்றிய 7 மாணவர்களில் 6 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேலும் பெற்றதோடு அவர்களுக்குள் 100 புள்ளி களுக்கு மேல் மூவரும், கூடிய புள்ளியாக 146 புள்ளி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் காலத்தில் மேலும் அதிகரிக்கச் செய்வோம் எனக் கூறிக்கொள்கிறோம்.

### நலன்விரும்பிகளிடமிருந்து கிடைத்த உதவிகள்

01. வர்சினி அலுமினியம் பிற்றிற் சென்ரர் - கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
02. கௌரவ சரவணபவன் அவர்கள் - யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.
03. கௌரவ சில்வஸ்ரின் அலன்ரின் அவர்கள் - யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.
04. இளைப்பாறிய தபாலதிபர் திரு. C. ஜெகநாத் குடும்பத்தினர்
05. திருமதி சு. சூரியராஜா அதிபர் அவர்கள் யா/சோதிவேம்படி வித்தியாசாலை.

### பழைய மாணவர்களின் உதவிகள்

மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கும் பழைய மாணவர்கள் பின்வருமாறு.

திரு. திருமதி பாலு சிறிதரன் குடும்பம், திரு. திருமதி மோசேஸ் குடும்பம், திரு. திருமதி அப்புக்குட்டி செல்வராசா குடும்பம், திரு. திருமதி மோசேஸ் இமானுவேல் றோசன் குடும்பம் இவர்கள் வகுப்பு நிலையில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூபா 3000/-, 2000/-, 1000/- பணப் பரிசில்களைக் கொடுத்து வருகிறார்கள். மற்றும் பரிசுச் செலவுக்காக ரூபா 5000/-உம் தந்து உதவுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு – 2014

இவ்வருடத்திற்கான வருட மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக பேராசிரியர் க.தேவராஜா அவர்களும், திருமதி பா. சிவன்சேய் ஆசிரிய ஆலோசகர் - வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம் ஆகியோர் சிறப்பித்ததுடன் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பதிகாரியாக செல்வி ச. ஐயாத்துரை, திரு. செ. யூட்ரவிநாத் ஆகியோர் திறம்பட பணியாற்றி வருகின்றனர்.

**கால்கோல் விழா**

தரம் 1 மாணவர்களின் கால்கோல் விழாவிற்கு தேசமானி லயன் S. T. செல்வராஜா அவர்களும், ஆர்க் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டனர்.

**ஆசிரியர் தினம்**

07-10-2014 அன்று பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**ஒளி விழா**

வருடா வருடம் ஒளிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**பெற்றோர்களே!**

அன்பான பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் நலன் கருதி முழுமையான ஆர்வத்துடனும் ஒத்துழைப்புடனும் சமூகத்துடனும் இணைந்து முடிந்த அளவிற்கு அர்ப்பணிப்புக்களினூடாக பாட சாலையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருவதையிட்டு அதிபர், ஆசிரியர்கள் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**மாணவச் செல்வங்களே!**

உங்கள் ஆரம்ப அத்தியாயம் எதிர்கால வாழ்விற்கு வசந்த காலமாக திகழ காலத்தை வீணாக்க முயலாது எமது பாடசாலையின் மகுடவாசகம் “கசடறக் கற்க” என்பதற்கு ஏற்ப கல்விச் செல்வத்தை பெற்று முழுமையான மனிதனாகத் திகழ வேண்டும் என வாழ்த்து கிறோம்.

**புதிதாக இணைந்தவர்கள் :**

இப்பாடசாலையில் இவ்வருடம் புதிய அதிபராக குணவதி சண்முகநாதன் ஆகிய நான் கடமையைப் பொறுப்பேற்றுள்ளேன். அத்துடன் இப் பாடசாலையை எதிர்காலத்தில் சிறப்பாக அமைய என்னாலான அனைத்துச் செயற்பாடுகளையும் கடமை உணர்வுடன் பணியாற்றுவேன் எனக் கூறிக்கொண்டு இப்பாடசாலைச் சமூகத்தின் பூரண ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

செல்வி ச. ஐயாத்துரை ஆசிரியர் பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகுந்த பணியாற்றுவதுடன் ஏனைய ஆசிரியர்கள் திருமதி க. ரமேஸ்

குமார், திரு. செ. யூட்ரவிநாத், திருமதி கே. விஜிந்தன், திருமதி ப. நவாஸ்சங்கர், செல்வி ஞா. பற்றிசியா, திரு. அ. சுரேஸ்குமார் ஆகியோர் தமது அர்ப்பணிப்புடன் சேவையை வழங்கி வருகிறார்கள்.

### இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தன்னாலான பல பணிகளை முன்னெடுத்துச் சென்ற திருமதி சுனீத்ரா சூரியராஜா அவர்களின் சேவை மேலும் மேலும் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

### எமது பாடசாலைத் தேவைகள்

**(முக்கியமாக மேற்குப்பக்க மதில் அவசியமானதும் அவசரமானது மாகும்)**

- விழா மண்டபம்
- ஆசிரியர்களுக்கான கதிரைகள், மேசைகள்
- அலுவலகத் தளபாடங்கள்
- போட்டோப் பிரதி இயந்திரம்
- Multimedia
- சிறுவர் பான்ட் வாத்திய கருவிகள்
- கணனி
- கணனியறை தளபாடம்
- நூலகம் / தளபாடம்
- காட்சிப் பலகைகள்
- அறிவித்தல் பலகை
- விழாவிற்குத் தேவையான கதிரைகள்
- மனிதவளத் தேவைகள்
- முழுநேர ஆங்கில ஆசிரியர்
- சுத்திகரிப்பு தொழிலாளர் (பகுதி நேரமாவது)

### நிறைவுரை

இன்றைய விழாவிற்கு வருகை தந்த முதன்மை விருந்தினர் எம்மையெல்லாம் மகிழ்வித்த யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன் அவர்களுக்கும் சமூகம் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எமது அன்பான கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. சண்முக குலகுமாரன் அவர்களுக்கும் நன்றியைக் கூறி,

தேசமானி லயன் செ. செல்வராஜா - J.P அவர்களுக்கும், ஓய்வு பெற்ற அதிபர் லயன் சி. நாகையா - J.P அவர்களுக்கும், திருமதி சு. சூரியராஜா அதிபர் அவர்களுக்கும், செல்வி. வே. சிவலோஜினி ஆசிரியர் ஆலோசகர் அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

ஒளிவிழாவை சிறப்பித்து ஆசியுரை ஆற்றிய வணக்கத்திற்குரிய வணபிதா X.W. ஜேம்ஸ் அடிகளாருக்கும், எமது சித்தி விநாயகர் ஆலய குரு சிவஸ்ரீ பேரம்பல நிரூஷனக் குருக்கள் அவர்களுக்கும் நன்றிகள்.

மற்றும் Band வாத்தியக் கருவிகள் இசைத்த குழுவினருக்கும், ஒலிபெருக்கி அமைப்பைப் பெற்றுத்தந்த திரு. R.B. அமல்ராஜ் அவர்களுக்கும், கதிரைகளைப் பெற்றுத்தந்த பழைய மாணவன் திரு. சி. சுதர்சன் அவர்களுக்கும், அதிபர் அறிக்கை மற்றும் அழைப்பிதழை வெளியிடுவதற்கு உதவிய ஓய்வுபெற்ற தபாலதிபர் திரு. C. ஜெகநாத் குடும்பத்தினருக்கும், பிஸ்கட் பெட்டியை வழங்கிய திருமதி யோகராணி அவர்களுக்கும் எமது பாடசாலை தேவாலயத்திற்கு பொறுப்பானவர் எமது மேடை அலங்காரத்திற்கு உதவியமை குறிப்பிடத்தக்கது. மேலும் பல்வேறு வழிகளிலும் உதவி ஏனை யோருக்கும் நன்றிகள்.

இவ்விழாவிற்கு பல்வேறு வழிகளிலும் முன்நின்று உதவிவரும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனை வருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

"தூய்மை, பொறுமை, விடா முயற்சி
ஆகிய இம்மூன்றும் வெற்றிக்கு
இன்றியமையாதவையாகும்"

# மன்றச் செயற்பாடுகள்

## மாணவர் மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வன் யு. வைஸ்ணவன் |
| உபதலைவர் | : | செல்வி நா. ஜர்சனா |
| செயலாளர் | : | செல்வி ர. ஜனுசியா |
| பொருளாளர் | : | செல்வன் இ. சிவர்சன் |
| பொறுப்பாசிரியர்கள் | : | செல்வி ச. ஐயாத்துரை, |
| | | திருமதி தே. விஜிந்தன் |

## கிறீஸ்தவ மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வன் வி. ஜெயப்பிரகாஸ் |
| உபதலைவர் | : | செல்வன் யு. சென்சியா |
| செயலாளர் | : | செல்வன் ஞா. சுலக்சன் |
| பொருளாளர் | : | செல்வன் வ. அசின்சறோன் |
| பொறுப்பாசிரியர்கள் | : | திரு. செ. யூட்ரவிநாத் |
| | | திருமதி வ. நாவஸ்சங்கர் |

## இந்துமன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வன் இ. சிவர்சன் |
| உபதலைவர் | : | செல்வி ர. ஜனுசியா |
| செயலாளர் | : | செல்வன் யு. வைஷ்ணவன் |
| பொருளாளர் | : | செல்வன் சு. சாருகா |
| பொறுப்பாசிரியர்கள் | : | திரு. அ. சுரேஜ்குமார் |
| | | திருமதி கே. விஜிந்தன் |

## ஆங்கில மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வன். வி. ஜெயப்பிரகாஸ் |
| உபதலைவர் | : | செல்வன். யு. வைஷ்ணவன் |
| செயலாளர் | : | செல்வி. ர. ஜனுசியா |
| பொருளாளர் | : | செல்வன். இ. சிவர்சன் |
| பொறுப்பாசிரியர்கள் | : | செல்வி. ஞா. பற்றீசியா |

# அனர்த்த பாதுகாப்புக்குழு

**முதலுதவி அணி**
செல்வி ச. ஐயாத்துரை
செல்வன் யு. வைஷ்ணவன்
செல்வி ர. ஜனுசியா

**பாதுகாப்பு அணி**
திரு. செ. யூட்ரவிநாத்
செல்வன். வி. ஜெயப்பிரகாஷ்
செல்வன். வ. அசின்சறோன்

**தீயணைக்கும் அணி**
திரு. செ. யூட்ரவிநாத்
திரு. அ. சுரேஸ்குமார்
செல்வன் இ. சிவர்சன்
செல்வன் ஞா. சுலக்ஷன்

**உளவியல் அணி**
செல்வி ச. ஐயாத்துரை
திருமதி ந. வளனி
செல்வி ர. ஜனுசியா
செல்வி சு. சாருகா

# கட்டாயக் கல்விக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| அதிபர் | - திருமதி கு. சண்முகநாதன் |
| கிராமசேவையாளர் | - திரு. ப. நாகேந்திரராஜா (J/182) |
| வலிகாம கல்வி வலயப் பிரதிநிதி | - திரு. க. சிவரூபன் |
| சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | - திரு. த. கஜசிறி |
| சிரேஷ்ட ஆசிரியர் சங்கம் | - செல்வி ச. ஐயாத்துரை<br>திருமதி க. ரமேஸ்குமார் |
| சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் | - திரு. T. கிருஷ்ணகுமார் |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | - திரு. S. நாகசேனா |
| SDS உறுப்பினர் | - திருமதி அ. தேவராஜா |
| மதகுரு | - பங்குத்தந்தை, வணக்கத்துக்குரிய X.W. ஜேம்ஸ் அடிகளார் |
| நலன்விரும்பி | - திருமதி நா. யோகராணி |

**சுகாதார மேம்பாட்டுக்குழு :**

| | |
|---|---|
| தலைவர் | - திருமதி க. ரமேஸ்குமார் |
| செயலாளர் | - செல்வன். யு. வைஷ்ணவன் |
| பொருளாளர் | - செல்வி. ர. ஜனுசியா |
| உறுப்பினர்கள் | - செல்வன். பி. பிரஷாந்<br>செல்வி. நா. யர்சனா |

### பாடசாலை வரவுக்குழு

அதிபர் - திருமதி கு. சண்முகநாதன் (அதிபர்)
ஆசிரியர்கள் - செல்வி ச. ஐயாத்துரை (சிரேஸ்ட ஆசிரியர்)
திருமதி வ. நவாசங்கர்
திரு. செ. யூட்ரவிநாத்
திரு. அ. சுரேஸ்குமார்
SDS செயலாளர் - திருமதி வி. செல்வசுபிதா
பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி - செல்வி த. தர்சினி

### வங்கிச் சேவை

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக மக்கள் வங்கி (மானிப்பாய் கிளை) சிறுவர் சேமிப்பு அலகின் மூலம் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படு கின்றன. இதன்மூலம் மாணவர்களின் சேமிப்புப் பழக்கமும் ஊக்குவிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு பல பரிசில்களும் இவ் வங்கியால் வழங்கப்பட்டு வருகின்றன.

### பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDS)

தலைவர் - திருமதி கு. சண்முகநாதன் (அதிபர்)
செயலாளர் - திருமதி சு. கஜீந்திரன்
பொருளாளர் - செல்வி. ச. ஐயாத்துரை (ஆசிரியர்)

### பாடசாலை அபிவிருத்திக்குழு (SDC)

தலைவர் - திருமதி கு. சண்முகநாதன் (அதிபர்)
செயலாளர் - திருமதி நா. கனகநாயகம்
பொருளாளர் - செல்வி ஜ. சசிசுகேதினி (ஆசிரியர்)
வலய இணைப்பாளர் - திருமதி. து. ரிச்சட்றேமன்

இக்குழுவினூடாக பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகள் பல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### பழைய மாணவர் சங்கம்

அதிபரின் தலைமையில் இச்சங்கத்திலுள்ளோர் நேரம் காலம் பாராது பாடசாலைச் செயற்பாடுகளுக்கு பல வழிகளில் உதவி வருகின்றனர். இதன் செயலாளராக பா. சதீஸ் ஆசிரியர் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். பொருளாளராக செல்வி. த. தர்சினி கடமையாற்றி வருகின்றார்.

# எமது பலம் பலவீனங்கள்

**பலம்**

- சிறந்த ஆரம்பக்கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் அவர்களின் ஒத்துழைப்பும்.
- பிள்ளைநேய அணுகுமுறையிலான அழகான கற்றல், கற்பித்தலுக்கான சூழல்.
- பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்பு
- பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஒத்துழைப்பு
- பழைய மாணவர் சங்க ஒத்துழைப்பு
- எந்தவித எதிர்பார்ப்புமின்றி மாணவர்களுக்கான பால் மற்றும் மதிய உணவைத் தயாரித்துவரும் தொண்டர்கள்.
- தாமாக உதவ முன்வரும் நலன்விரும்பிகள்

**சவால்களும் பலவீனங்களும்**

- போதிய வளங்களுடன் கூடிய அயற் பாடசாலைகளினால் மாணவர் சேர்வு வீதம் குறைவாக உள்ளமை.
- நிறைவான உள்ளீடு இருந்தும் மாணவர்களின் வீட்டுச் சூழலால் போதிய வெளியீடு இல்லாமை.
- சமூகத்தின் மனப்பாங்கில் மாற்றமின்மை
- சிரமமான போக்குவரத்துப் பாதை
- சில பெற்றோரின் அக்கறையற்ற தன்மை
- மாணவர்களின் வறுமையான வீட்டுப் பின்னணி
- பழைய மாணவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற மனப்பாங்கு இருந்தும் அதற்கேற்ற பொருளாதார வசதியின்மை.

# 2013ஆம் ஆண்டு வகுப்பு நிலையில் பரிசில் பெறுவோர் விபரம்

**இவர்களிற்கான பரிசை வழங்கியோர்**

1. திரு. திருமதி பாலுசிறிதரன் குடும்பத்தினர்
2. திரு. திருமதி மோசேஸ் யேசுதாசன் குடும்பத்தினர்
3. திரு. திருமதி அப்புக்குட்டி செல்வராசா குடும்பத்தினர்
4. திரு. திருமதி மோசேஸ் இமானுவேல் றோசன் குடும்பத்தினர்

| | | |
|---|---|---|
| தரம் 1 | செல்வன் சு. பிரசாந் | ரூபா 3000.00 |
| | செல்வி கோ. நவீனா | ரூபா 2000.00 |
| | செல்வி ப. சார்மி | ரூபா 1000.00 |
| தரம் 2 | செல்வி க. டிவின்ஜா | ரூபா 3000.00 |
| | செல்வி க. டிவினியா | ரூபா 2000.00 |
| | செல்வி சு. ரிஜசாலினி | ரூபா 1000.00 |
| தரம் 3 | செல்வி பே. துர்க்காஜினி | ரூபா 3000.00 |
| | செல்வி தே. சுஜானா | ரூபா 2000.00 |
| | செல்வி ர. குகன்சி | ரூபா 1000.00 |
| தரம் 4 | செல்வி ர. ஜனுசியா | ரூபா 3000.00 |
| | செல்வன் இ. சிவர்சன் | ரூபா 2000.00 |
| | செல்வன் யு. வைஷ்ணவன் | ரூபா 1000.00 |
| தரம் 2 | செல்வன் அ. விதுஷன் | ரூபா 3000.00 |
| | செல்வன் வி. றொஜிங்ரன் | ரூபா 2000.00 |

## பாடரீதியாகப் பரிசில் பெறுவோர் விபரம்

**தரம் 1**

சு. பிரசாத் - சமயம், தமிழ்மொழி, கணிதம், சுற்றாடல்
கோ. நவீனா - சமயம், தமிழ் கணிதம், சுற்றாடல்
ப. சார்மி - சமயம், தமிழ், கணிதம்
ச. டிலஸ்காந் - சுற்றாடல்

**தரம் 2**

க. டிவின்ஜா - சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம்
க. டிவினியா - தமிழ், சுற்றாடல், கணிதம்
சு. ரிஜசாலினி - சமயம், சுற்றாடல், கணிதம்
ர. நிவேதா - சுற்றாடல், ஆங்கிலம்
ஸ்ரீ. டிஜனுஷன் - சமயம்
ப. அபினாஸ் - றோ. க. சமயம்

**தரம் 3**

பே. துர்க்காஜினி - சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
தே. கஜானா - சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
ர. குகன்சி - சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
யு. சென்சியா - றோ. க. சமயம்

**தரம் 4**

ர. ஜனுசியா - சமயம், தமிழ்மொழி, கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
யு. வைஷ்ணவன் - சமயம், தமிழ்மொழி, கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
இ. சிவர்சன் - சமயம், தமிழ்மொழி, கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
வி. ஜெயப்பிரகாஷ் - சுற்றாடல், றோ.க.சமயம்
ஞா. சுலக்ஷன் - சுற்றாடல், றோ. க. சமயம்

**தரம் 5**

அ. விதுஷன் - சமயம், தமிழ்மொழி, கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
வி. றொஜிங்ரன் - சுற்றாடல், றோ.க.சமயம், தமிழ்மொழி, கணிதம், ஆங்கிலம்.

## பாடசாலை மட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் – 2013

1. ஆக்கம் எழுத்து
   1. ஜனுசியா ரவிக்குமார்
   2. அனிஸ்ரன் விதுஷன்
   3. வில்லியம் றொபேர்ட் றொஜிங்ரன்
2. வாசிப்பு :
   1. வி. றொஜிங்ரன்
   2. அ. விதுஷன்
   3. இ. சிவர்சன்
3. ஆக்கத்திறன் வெளிப்பாடு :
   1. ஞா. சுலக்ஷன்
   2. அ. விதுஷன்
   3. வி. றொஜிங்ரன்

4. பேச்சு :
1. யு. வைஷ்ணவன்
2. அ. விதுஷன்
3. வி. றொஜிங்ரன்

5. பாவோதல்
1. இ. சிவர்சன்
2. யு. வைஷ்ணவன்
3. ர. ஜனுசியா

6. இசையும் அசைவும்
1. நா. ஜர்சனா
2. அ. விதுஷன்
3. வி. றொஜிங்ரன்

## பண்ணிசைப்போட்டி முடிவுகள் - 2013

தரம் 1
1. சார்மி
2. சு. பிரசாந்
3. ச. டிலஸ்காந்

தரம் 2
1. க. டிவினியா
2. ஸ்ரீ. டினுஷன்
3. ர. நிவேதா

தரம் 3
1. யே. துர்க்காஜினி
2. தே. கஜானா
3. க. கேசவர்த்தனி

தரம் 4
1. யு. வைஷ்ணவன்
2. ர. ஜனுசியா
3. நா. ஜர்சனா

தரம் 5
அ. விதுஷன்

## சித்திரப் போட்டி - 2013

தரம் 1
1. சு. பிரசாந்
2. கோ. நவீனா
3. ச. டிஸ்காந்

தரம் 2
1. ஸ்ரீ. டினுஷன்
2. க. டிவின்ஜா
3. இ. தபிஸ்ரன்

தரம் 3
1. க. கேசவர்த்தனி
2. வ. அசின்சறோன்
3. யு. சென்சியா

தரம் 4
1. ர. ஜனுசியா
2. ஞா. சுலக்ஷன்
3. வி. ஜெய்பிரகாஷ்,
யு. வைஷ்ணவன்

தரம் 5.
1. அ. விதுஷன், 2. வி. றொஜிங்ரன்

## விரைவு கணித்தற்திறன் போட்டி – 2013

தரம் 2
1. ஸ்ரீ. டினுஷன்
2. இ. தபிஷ்ரன்
3. க. டிவினியா
4. க. டிவின்ஜா
5. ர. நிவேதா

தரம் 3
1. பே. துர்க்காஜினி
2. தே. கஜானா
3. ர. குகன்சி
4. யு. சென்சியா
5. வ. அசின்சறோன்

தரம் 4
1. ர. ஜனுசியா 2. இ. சிவதர்சன் 3. யு. வைஷ்ணவன்
4. வி. ஜெய்பிரகாஷ் 5. ஞா. சுலக்ஷன்

தரம் 5
1. அ. விதுஷன் 2. அ. றொஜிங்ரன்

## வாய்ப்பாட்டு மனனம் – 2013

தரம் 3
1. பே. துர்க்காஜினி
2. தே. கஜானா
3. க. கேசவர்த்தனி

தரம் 4
1. இ. சிவர்சன்
2. ர. ஜனுசியா
3. யு. வைஷ்ணவன்

தரம் 5
1. அ. விதுஷன் 2. வி. றொஜிங்ரன்

## சிங்கள விநாடிவினாப் போட்டி –2003

தரம் 2
1. சு. ரிஜசாலினி
2. ஸ்ரீ. டினுஜன்
3. க. டிவினியா

தரம் 3
1. பே. துர்க்காஜினி
2. தே. கஜானா
3. ர. குகன்சி

தரம் 4
1. இ. சிவர்சன்
2. ர. ஜனுசியா
3. வி. ஜெயப்பிரகாஷ்

தரம் 5
1. அ. விதுஷன்
2. வி. றொஜிங்ரன்

## சிங்கள பார்த்தெழுதல் – 2013

தரம் 3
1. தே. கஜானா
2. பே. துர்க்காஜினி
3. ர. குகன்சி

தரம் 4
1. ர. ஜனுசியா
2. யு. வைஷ்ணவன்
3. வி. ஜெயப்பிரகாஷ்

தரம் 5
1. வி. றொஜிங்ரன் 2. அ. விதுஷன்

## பேச்சு

| | | | |
|---|---|---|---|
| தரம் 1 | 1. கோ. நவீனா<br>2. சு. பிரசாந்<br>3. ப. சார்மி | தரம் 2 | 1. க. டிவினியா<br>2. ஸ்ரீ. டினுஷன்<br>3. ப. அபினாஸ் |
| தரம் 3 | 1. பே. துர்க்காஜினி<br>2. தே. கஜானா<br>3. ர. குகன்சி | தரம் 4 | 1. இ. சிவர்சன்<br>2. ர. ஜனுசியா<br>3. யு. வைஷ்ணவன் |
| தரம் 5 | 1. யு. வைஷ்ணவன்<br>3. வி. றொஜிங்ரன் | | 2. அ. விதுஷன் |

## நுண்ணறிவுத் திறன் போட்டி

1. வி. றொஜிங்ரன் 2. அ. விதுஷன் 3. இ. சிவர்சன்
4. யு. வைஷ்ணவன் 5. ர. ஜனுசியா

# இணைப்பாடவிதான போட்டி முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| தரம் 1 | சு. பிரசாந் | சித்திரப்போட்டி | குடும்ப மட்டம் 1ஆம் இடம் |
| தரம் 3 | க. கேசவர்த்தனி | சித்திரப்போட்டி | குடும்ப மட்டம் 3ஆம் இடம் |
| தரம் 4 | ர. ஜனுசியா | சித்திரப்போட்டி | குடும்ப மட்டம் 3ஆம் இடம் |
| தரம் 4 | இ. சிவர்சன் | வாய்ப்பாட்டு மனனம் | குடும்ப மட்டம் 1ஆம் இடம்<br>கோட்ட மட்டம் 2ஆம் இடம் |
| தரம் 1 | சு. பிரசாந் | சிங்கள விநாடிவினா | குடும்ப மட்டம் 2ஆம் இடம் |
| தரம் 2 | சு. ரிஜசாலினி | சிங்கள விநாடிவினா | குடும்ப மட்டம் 3ஆம் இடம் |
| தரம் 3 | பே. துர்க்காஜினி | சிங்கள விநாடிவினா | குடும்ப மட்டம் 2ஆம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| தரம் 3 | பே. துர்க்காஜினி | பண்ணிசை | குடும்ப மட்டம் 3ஆம் இடம் |
| தரம் 1 | சு. பிரசாந் | திருக்குறள் மனனம் | குடும்ப மட்டம் 3ஆம் இடம் |
| தரம் 4 | யு. வைஷ்ணவன் | திருக்குறள் மனனம் | குடும்ப மட்டம் 2ஆம் இடம் |
| தரம் 2 | இ. சு. பிஸ்ரன் | விரைவு கணிதத்திறன் போட்டி | குடும்ப மட்டம் 5ஆம் இடம் |
| தரம் 3 | ர. ஜனுசியா | விரைவு கணிதத்திறன் போட்டி | குடும்ப மட்டம் 3ஆம் இடம் |
| தரம் 3 | யு. வைஷ்ணவன் | விரைவு கணிதத்திறன் போட்டி | குடும்ப மட்டம் 4ஆம் இடம் |
| தரம் 4 | ர. ஜனுசியா | சிங்கள பார்த்தெழுதல் | வலய மட்டம் 10ஆம் இடம் |
| தரம் 3 | கி. ஆரோக்கிய மேரி | விசேட கல்வி விளையாட்டுப் போட்டி | |
| | | நின்று நீளம் பாய்தல் | வலயம் 1ம் இடம் |
| | | ஓட்டம் | வலயம் 2ம் இடம் |
| | | பந்தெறிதல் | வலயம் 2ம் இடம் |

**2014இல் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய ஏழு மாணவர் களில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்.**

| | |
|---|---|
| செல்வன் யுகதேஸ்வரன் வைஷ்ணவன் | 146 புள்ளி |
| செல்வி ஜனுசியா ரவிக்குமார் | 133 புள்ளி |
| செல்வன் இந்திரராசா சிவர்சன் | 104 புள்ளி |

**70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

| | |
|---|---|
| செல்வன் ஞானராசா சுலக்ஷன் | 97 புள்ளி |
| செல்வன் வில்லியம் ஜெயக்குமார் ஜெயப்பிரகாஷ் | 88 புள்ளி |
| செல்வி சாருகா சுரேஸ்குமார் | 80 புள்ளி |
| செல்வி ஜர்சனா நாகலூத் மகிழ்ராசா | 69 புள்ளி |

## ஆங்கிலதினப் போட்டி - 2013

### பார்த்தெழுதல்

| | தரம் 3 | தரம் 4 | தரம் 5 |
|---|---|---|---|
| 1ம் இடம் | யு. சென்சியா | ர. ஜனுசியா | அ. விதுசன் |
| 2ம் இடம் | பே. துர்க்காயினி | நா. ஜர்சனா | வி. றொஜிங்ரன் |
| 3ம் இடம் | கி. பிரியா | வி. ஜெயபிரகாஷ் | |

### ஆங்கில வாசிப்பு

| | தரம் 3 | தரம் 4 | தரம் 5 |
|---|---|---|---|
| 1ம் இடம் | பே. துர்க்காயினி | இ. சிவர்சன் | அ. விதுசன் |
| 2ம் இடம் | ே. கஜானா | ர. ஜனுசியா | வி. றொஜிங்ரன் |
| 3ம் இடம் | ர. குகன்சி | யு. வைஷ்ணவன் | |

### ஆங்கில கவிதை

| | தரம் 3 | தரம் 4 | தரம் 5 |
|---|---|---|---|
| 1ம் இடம் | பே. துர்க்காயினி | யு. வைஷ்ணவன் | அ. விதுசன் |
| 2ம் இடம் | தே. கஜானா | ர. ஜனுசியா | வி. றொஜிங்ரன் |
| 3ம் இடம் | யு. சென்சியா | இ. சிவர்சன் | |

## திருக்குறள் மனனப்போட்டி

தரம் 1
1) சு. பிரசாந்
2) ப. சர்மி
3) கோ. நவீனா

தரம் 2
1) ப. அபினாஸ்
2) ஸ்ரீ. டினுஷன்
3) க. டிவின்ஜா

தரம் 3
1) பே. துர்க்காஜினி
2) தே. கஜானா
3) க. கேசவர்த்தனி

தரம் 4
1) யு. வைஷ்ணவன்
2) இ. சிவர்சன்
3) நா. ஜர்சனா

தரம் 5
1) அ. விதுஷன்
2) வி. றொஜிங்ரன்

## STAFF DETAILS

| | | |
|---|---|---|
| Mrs. K. Shanmuganathan | - | Principal<br>Special Primary. Trd, |
| Miss S. Ayadurai | - | B.Com, Dip.in.Edu S.P Primary Trd |
| Mr. S. Jude Ravinarth | - | SP. Tamil.Trd |
| Mrs. V. Navashankar | - | SP. Primary. Trd |
| Mr. A. Sureskumar | - | SP. Primary. Trd |
| Mrs. K. Vijinthan | - | National Dip. in teaching<br>(SP. Primary) |
| Mrs. K. Rameskumar | - | SP. Primary. Trd |
| Miss. P. Gnanachandran | - | HNDA |

## உதவியோர் விபரம்

| | | |
|---|---|---|
| ஒலிபெருக்கி | - | திரு. R.B. அமல்ராஜ் |
| கதிரைகள் | - | திரு. சி. சுதர்சன் |
| பரிசளிப்பு புத்தகம் செலவு | - | ஓய்வுபெற்ற தபாலதிபர் C. ஜெகநாத் |
| பெற்றோர்கள் | - | 17000 |
| ஈஸ்வரன் ஸ்ரோர்ஸ் | - | 100 |
| ஏ. சசிதரன் | - | 200 |
| குபேரன் எலக்ரிக்கல்ஸ் | - | 150 |
| ப. தனுஸ் | - | 100 |
| VSM | - | 300 |
| VSK | - | 200 |
| ரஞ்சன் ஹாட்வெயர் | - | 200 |
| ஐங்கரன் மோட்டோஸ் | - | 500 |
| சுந்தர்சன் | - | 500 |
| விநாயகர் புடவையகம் | - | 200 |
| மக்கள் வங்கி, மானிப்பாய் | - | 4000 |

ஒரு ஏழைக் குழந்தைக்குக் கல்வித்தானம் புரிந்துவிட்டால் அவன் வாழ்நாள் முழுவதும் உண்டு உடுத்து உவகை உறுவான். அப்புண்ணியம் அவனைப் படிக்க வைத்தவனுக்கு உண்டு. அறிவு தானத்திலும் மிஞ்சிய தானம் கிடையாது. நம் வீட்டுக்கு வந்த ஒருவனுக்கு இரண்டு ரூபாய் பெறுமானமான உணவு தருகிறோம். அந்த உணவு ஐந்துமணி நேரத்தில் செரித்து விடுகிறது. ஒரு ரூபாய்க்கு சிறந்த அறிவு நூலை ஒருவனுக்குத் தந்தால் மூன்று தலைமுறைக்கு அந்த நூல் வழிகாட்டும். பிழைகளுக்கெல்லாம் தலையாய பிழை அறிவு நூலைக் கல்லாததுதான். அதனால்தான் பட்டினத்து சுவாமிகள் "கல்லாப் பிழையும்" என்று பாடியருளினார். அறிவு நூல் கல்லா மூடர் என்கிறார் அருணகிரிநாதர். ஆகவே குழந்தைகளைப் படிக்க வையுங்கள்...

# பாடசாலைக் கீதம்

வளர்ந்திடும் புதுமடம் றோ.க. தமிழ்
வனிதையைப் புகழ்ந்திடுவோம் - நாமே வளர்ந்திடும்
இன்பமொழித்தமிழ் இனியவை அருளி
அன்பொடு கற்றுமே உயர்ந்திட நல்கும் - வளர்ந்திடும்

மாண்புகழ் கொண்டு மாணவர் வளரவே
காண்புறுங் கலைவளம் கருத்துடன் நல்கி
வாண்புகழ் வளர்ந்திடும் வணபிதா பிலிப் பதியில்
வேண்டு நற்சிறப்போடு வளர் றோ.க தமிழன்னை

செந்தமி லாங்கிலம் சேர்தரு றோ. க சைவம்
புந்தி நிறைந்திடு பொதறிவொடு சுற்றாடல்
சொந்தமாய் வந்திடும் கணித விஞ்ஞானம்
தந்தெமை வளர்த்திடும் தாயினைப் பணிவோம்

அறிவொளி தந்திடும் இறைவனைப் பணிவோம்
நெறிவழி காட்டும் நம் அதிபரைப் புகழ்வோம்
சிறுமைகள் அகற்றி நல் அறிவுரை கூறும்
அறிஞரைப் போற்றுவம் அன்புடன் நாமே

வாழிய வாழிய றோ.க தமிழ்ச் சாலை
வாழிய வாழிய அதிபரொடு ஆசிரியர்
வாழிய வாழிய உடுவை நற்பதியே
ஊழி தோறு றூழி உயர்ந்த தென்றும் வாழியவே...
வளர்ந்திடும்......